R 5553

# உன் சிலுவையை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்று

## TAKE UP THY CROSS AND FOLLOW CHRIST

**“ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்,அவன் தன்னைத்தான் வெறுத்து,தன்சிலுவையை எடுத்துக் கொண்டுஎன்னைப் பின்பற்றக்கடவன்”—மத்தேயு 16:24.**

இவ்வசனம் மிக அழகானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒன்று. ‘‘என் பின்னே வா(come after me)’’ என்று ஆங்கில வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட வார்த்தைகள், தமிழ் வேதாகமத்தில் ‘‘என்னைப் பின்பற்று’’ என்று சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முற்காலங்களில் ஒரு ஆசிரியர், தன் சீஷர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தாரை உடையவராயிருந்து, அவரைப் பின்பற்றுவது வழக்கமாயிருந்தது. சாக்ரடீஸ் செய்தது இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவ்வாறே நம் கர்த்தருடைய சீஷர்கள், மாணவர்கள் அவரைப் பின்பற்றினர். அவரது உதடுகளிலிருந்து அறிவுரையைத் தொடர்ந்து பெறுவதற்கான வாய்ப்பை அவர்கள் அடைவதற்கு, அவர்கள் அவரோடு பிரயாணம் செய்தனர். முற்காலங்களில் அனைத்து ஆசிரியர்களும் அவ்வாறே செய்தனர். சில சமயங்களில், கமாலியேலின் விஷயத்தில் நடந்ததுபோல, அவர்கள் ஒரு பள்ளியை உடையோராயிருந்து, மாணவர்கள், ‘‘கமாலியேலின் பாதத்தருகில்’’ அமர்ந்திருந்தனர். இன்றைய நாளில் நாம் ‘‘பெத்தேலின்’’ மேஜையில் செய்வதுபோல், அவர்கள் வினாக்களை கலந்தாய்வு செய்தனர். மாணவர்கள் கேள்விகளை எழுப்பி, ஆசிரியரின் கருத்துக்களைப் பெறுவது அவர்களுடைய வழக்கமாயிருந்தது.

தாம் போதித்திருந்தவர்களில் யாராகிலும் ஒருவர், தான் கடினமான அனுபவங்களை பெறப்போவதை ஆரம்பத்திலேயே அறிந்திருப்பார்; அவர் உயரிய கனத்தை அடையமாட்டார் என்று இயேசு கூறினார். அதற்கு எதிர்மாறாக, அவருடைய சீஷர்களாக இருக்கவிரும்புவோர், அவர்களுடைய சிலுவையைஎடுத்துக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். பிரயாணம் முழுவதுமாக சோதனைகள் இருக்கும் என்று அவர் அவர்களுக்குக் கூறினார். தவறான புரிதலின்கீழ் எவராகிலும் சீஷர்களாவதை கர்த்தர் விரும்பவில்லை.‘‘நான் எங்கேயோ, அங்கே என் சீஷனும் இருப்பான்’’ இந்த கண்ணீரின் பள்ளத்தாக்கில் இயேசுவைப் பின்பற்றுவோர், தேவனுக்கும் சத்தியத்துக்கும் சாட்சியாயிருந்து, அவரால் ஆசீர்வதிக்கப்படுவதோடு, இறுதியில் அவரது மேசியாவுக்குரிய மகிமை கனம் மற்றும் அழியாமையில் பங்குபெறுவர். ஆனால் அவரது மரணத்திற்குள் மூழ்கி, அவரது பாத்திரத்தில் பங்கு பெறாவிடில் அவரது ராஜ்யத்தில் நாம் பங்குபெறமுடியாது.

--------